# ரூஹா சுவாச காற்று

காற்று – 15 நவம்பர் 2025 சுவாசம் – 10
ஆண்டு சந்தா ₹ 200/- தனி இதழ் ₹ 20/-







# இதயம் திறந்து உங்களுடன்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு அன்பின் வாழ்த்துகள். நீங்கள் அனைவரும் சுகமுடன் இருக்கிறீர்கள் என்று விசுவாசிக்கிறேன். தேவனுடைய பெரிதான கிருபையினாலும் உங்களுடைய ஊக்கமான ஜெபத்தினாலும் ரூஹா ஊழியங்களைக் கர்த்தர் இலட்சகணக்கான ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார்.

**“ஒரு சந்ததி ஆண்டவரை சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்” (சங்கீதம் 22:30)**

கடந்த மாதம் இஸ்ரவேல் தேசத்திலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற கர்த்தர் அடியேனுக்கு உதவி செய்தார். இஸ்ரவேலில் நமது இந்திய தேசத்தின் சார்பாக தமிழ் மொழியில் துதி ஆராதனை மற்றும் ஜெபங்களை ஏறெடுத்தோம். எனது மனைவி போதகர் ஜாய் அவர்கள் சாலொமோன் கட்டின தேவாலயம் இருந்த இடத்தில் சுரமண்டலத்தை வாசிக்க தேவன் கிருபை செய்தார்.

அதுமட்டுமல்லாது அமெரிக்க தேசத்தில் வருடந்தோறும் யூதர்கள் நடத்துகின்ற மாபெரும் கருத்தரங்கில் தமிழ் மொழியில் நானும் எனது மகள் மற்றும் மகன் ஆராதனை நடத்த தேவன் தயவு பாராட்டினார். அங்கே யூதர்களும் அமெரிக்கர்களும் “நன்றிபலிகள் செலுத்தியே நாங்கள்.., உன்னத தேவனுக்கு ஆராதனை” என்ற நமது நன்றி பாடல்களைத் தமிழில் பாடி ஆராதித்தனர். அநேக யூதர்கள் நமது நன்றி பாடல்கள் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும் என்றும், தங்களுடைய காரில் அதை எப்பொழுதும் கேட்டுக்கொண்டே இருப்போம் என்றும் மகிழ்ச்சியோடு என்னோடு பகிர்ந்து கொண்டார்கள்.




எந்தவித பலமான பின்னணியும் இல்லாமல், சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்து வளர்ந்த என்னை பலருக்கு ஆசீர்வாதமாகவும், குடும்பமாக ஊழியம் செய்யவும் கர்த்தர் தெரிந்து கொண்டதை நினைத்து கண்ணீரோடு நன்றி செலுத்துகிறேன். **“அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்தி, பிரபுக்களோடு உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் செய்கிறார்.”** தேவனுக்கே எல்லா கனத்தையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

உங்களுக்காக நான் கர்த்தரைத் துதிக்கிறேன்! உங்கள் ஜெபத்தினாலும், நீங்கள் தியாகத்தோடு அனுப்புகிற காணிக்கைகளினாலும் நம் “ரூஹா ஊழியங்கள்” தடையில்லாமல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தினமும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்! தினமும் அநேக அற்புதங்களை கர்த்தர் செய்கிறார்!! இந்த ஊழியத்தின் ஆசீர்வாதங்களில் நிச்சயமாக உங்களுக்கும் பங்குண்டு.

## பஞ்சாப் மிஷனரி ஊழியங்கள் - டிசம்பர் 03,04

நம்முடைய ரூஹா ஊழியத்தின் மூலமாக குஜராத், மஹாராஷ்டிரா, ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் நேபாள் ஆகிய இடங்களில் சுவிசேஷ எதிர்ப்பு மிகுந்த பணித்தளங்களில் ஊழியம் செய்து வரும் மிஷனரிகளை ஒவ்வொருமாதமும் காணிக்கைகளினால் தாங்கிக்கொண்டு வருகிறோம். சபை இல்லாத இடங்களில் புதிய சபைகளை கட்டுவதற்கு முயற்சிகளை எடுத்து வருகிறோம். அதன்படி, கடந்த செப்டம்பர் மாதம் 9,10,11 ஆகிய தேதிகளில் மூன்று நாள் மிஷனரி பயணமாக ஜார்கண்ட் மாநிலம் தும்கா என்ற பகுதிக்கு நானும், ரூஹா குழுவினரும் இணைந்து சென்று இயேசுவை அறியாத “சந்தாளி” இன மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து, சபைகளே இல்லாத இடங்களில் திருச்சபைகளை துவங்கி, அங்குள்ள பணித்தளங்களை சந்தித்து கிறிஸ்துவுக்குள் சபைகளையும், மிஷனரிகளையும் பெலப்படுத்தி அவர்களுக்கு இயன்ற உதவிகளை

செய்தோம். மேலும், போதகர்களுக்கு இசைக்கருவிகளை அன்பளிப்பாக வழங்கினோம்.

வருகிற டிசம்பர் மாதம் 03,04 ஆகிய தேதிகளில் பஞ்சாப் மாநிலம் அம்ரிட்ஸர், மோகா, குர்தாஸ்பூர் ஆகிய இடங்களில் காலையில் இரண்டு மிஷனெரி ஊழியர்கள் கூடுகையும், மாலையில் விடுதலைபெருவிழா மற்றும் வாலிபர்கள் பெருவிழா நடத்த திட்டமிட்டிருக்கிறோம். மேலும் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, ஒவ்வொரு மிஷனெரிகளுக்கும் வெகுமதிகளை வழங்கி அவர்களை உற்சாகப்படுத்த இருக்கிறோம். ஆகவே நீங்கள் குடும்பமாகவோ, குழுவாகவோ அல்லது சபையாகவோ மாதந்தோறும் உங்களுடைய பொருளாதாரத்தினால் மிஷனெரிகளை தாங்கும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன். இப்படி செய்வதன் மூலம், "நீங்கள் செல்ல முடியாத இடங்களுக்கு உங்கள் மூலமாக சுவிசேஷசம் அறிவிக்கப்படுகிறது." ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன் (நீதிமொழிகள் 11:30) என்று எழுதியிருக்கிறபடி, உங்கள் பெயரில் ஆத்துமாக்களை சேர்த்து வையுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## கிறிஸ்மஸை நெசாவோடு கொண்டாடுங்கள்

அன்பானவர்களே! பண்டிகை நாட்களில் நீயும் உன் குமாரரும், திக்கற்ற பிள்ளைகளோடும் ஆதரவற்றவர்களோடும் கூட சேர்ந்து சந்தோஷப்படுவீர்களாக. (உபாகமம் 16:14) என்ற வேத வாக்கின்படி, நெசா தொண்டு நிறுவனம் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் சமுதாயத்தில் நலிவடைந்தவர்களுக்கு, ஏழைகளுக்கு புத்தாடைகளை வழங்கி, அறுசுவை உணவளித்து ஆதரவற்ற மக்களுடன் கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்து வருகிறோம். இந்த ஆண்டும் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு வருகிற டிசம்பர் மாதத்தில் ஏழை எளியவர்களுக்கு கிறிஸ்துவின் அன்பை சொல்லி, பல வெகுமதிகளை கொடுத்து கிறிஸ்மஸை கொண்டாடவிருக்கிறோம். எனவே, உங்கள் குடும்பத்தின் சார்பாக உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளையும் பரிசுகளையும் அளித்து ஏழையின் சிரிப்பில் மகிழ உங்களை உற்சாகப்படுத்துகிறேன். (மேலும் விபரங்கட்கு பக்கம் 8 ஐ பார்க்கவும்)

## 24/7 துதி ஜெப எழுப்பதல் மையம் கட்டப்பட ஜெபியுங்கள்

வேதாகமத்தில் சொல்லியிருக்கிற கடைசி காலத்திற்குரிய அடையாளங்களை நாம் ஒவ்வொரு நாளும் கேள்விப்பட்டும் கண்டும் வருகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார். அதற்கு முன்பாக உள்ள "கடைசி கால எழுப்புதலுக்காக" நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? அதற்காக தினமும் ஜெபிக்கிறீர்களா? கர்த்தர் வெகு சீக்கிரத்தில் நம்முடைய இந்திய தேசத்தில் எழுப்புதலை அனுப்பப்போகிறார். எழுப்புதலை வேடிக்கை பார்ப்பதற்காக அல்ல, எழுப்புதலில் பங்கு கொள்வதற்காக கர்த்தர் உங்களை அழைக்கிறார்.

அதற்காகவே, நம்முடைய ரூஹா ஊழியங்கள் 24 மணிநேரமும் ஜெபம் மற்றும் துதி ஆராதனையை ஏறெடுப்பதற்காக "எழுப்புதல் ஜெப மையத்திற்கான இடத்தை அப்போஸ்தலனாகிய தோமா இரத்த சாட்சியாக மரித்த, செயிண்ட் தாமஸ் மவுண்டில் வாங்க கிருபை செய்திருக்கிறார். அந்த இடத்தில் கட்டிடத்தை கட்டி, உலகமெங்கும் துதி, ஜெப வீரர்கள் வந்து இந்திய தேசத்திற்காக ஜெபிப்பதற்காக கட்டிடத்தைக்கட்டி முடிக்க வேண்டும். சீக்கிரத்தில் ஜெப மையத்தைக்கட்டுவதற்கு




தேவைகளைக் சந்திக்கும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாரானால் எழுப்புதலுக்காய் உதாரத்துவமாய் விதையுங்கள்.

அடியேனுக்காகவும், நம்முடைய ரூஹா ஊழியக் குடும்பத்திற்காகவும், விசேஷமாக இந்த நவம்பர் மாதத்தில் செய்து முடிக்க வேண்டிய எல்லா ஊழியங்களையும் தேவ சித்தத்தின்படியே ஜெயமாக செய்து முடிக்கத்தக்கதான கிருபைகளை கர்த்தர் எங்களுக்குத் தந்தருளவும் தினமும் ஜெபியுங்கள்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்

**போதகர் ஆல்வின் தாமஸ்**

# ஒன்றும் உங்களை சேதப்படுத்த மாட்டாது!



போதகர்.
ஆல்வின் தாமஸ்

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளையே, ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களை வாழ்த்துகிறேன். இந்த நவம்பர் மாதத்திலே கர்த்தர் உங்களுக்கு அருமையான வாக்குத்தத்தை கொடுத்திருக்கிறார். கர்த்தர் கொடுக்கிற வாக்குத்தத்தங்கள் எல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறது. ஆகையால், இந்த வார்த்தையை கர்த்தர் எனக்குத்தான் கொடுத்திருக்கிறார் என்று சுதந்தரித்துக்கொண்டு, விசுவாசத்துடன் வாசியுங்கள்.

**இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது (லூக்கா 10:19)**

ஆம் பிரியமானவர்களே, உங்களுக்கு விரோதமாய் எழும்பும் எந்த சத்துருவும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஏனென்றால் கர்த்தருடைய வேதம் அவ்வண்ணமே கூறுகிறது. பிசாசின் போராட்டங்களால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறேன், போராட்டத்திற்கு மேல் போராட்டமாய் இருக்கிறது, குடும்பத்தில் சமாதானமே இல்லை என்று கலக்கத்தோடு இருக்கும் அன்பு தேவ பிள்ளையே, உங்களுக்குதான் இந்த தீர்க்கதரிசன வார்த்தை.

வாசித்துக்கொண்டிருக்கும்போதே, ஒன்றும் என்னை சேதப்படுத்தமாட்டாது என்று அறிக்கை செய்யுங்கள். சத்துருவே.. நீ என்னை தொட முடியாது. என் குடும்பத்தை சேதப்படுத்த முடியாது என்று அதிகாரத்தோடு முழங்குங்கள். கர்த்தர் உங்களுக்கு சத்துருவின் வல்லமையை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். நீங்கள் யுத்தக்களத்தில் நின்று சண்டையிட அவசியமே இல்லை. கர்த்தருடைய வசனமாகிய ஆவியின் பட்டயத்தை (வேதத்தை) எடுத்து அவனை வீழ்த்துங்கள்.

## இரவும் பகலும் காக்கிறார்

**மனுஷனை நீர் நினைப்பதற்கும், அவனை விசாரிப்பதற்கும் அவன் எம்மாத்திரம் (சங்கீதம் 8:4)** இருந்தபோதிலும், ஆண்டசராசரங்களையும் தம் வார்த்தையினால் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவன், உங்களையும் என்னையும் பாதுகாப்பதில் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் தெரியுமா? வேதம் சொல்கிறது, **இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை, தூங்குகிறதுமில்லை (சங்கீதம் 121:4)** என்று. நாட்டின் எல்லையில் காவல் காத்துக்கொண்டிருக்கும் வீரர்கள்கூட தங்கள் பணி நேரத்தில் கண் அயர்வதுண்டு. 24 மணி நேரமும் இயங்கிக்கொண்டிருக்கிற இயந்திரங்கள் கூட சில சமயங்களில் பழுதாகிப்போய்விடக்கூடும். ஆனால் பரம தகப்பனின் கண்கள் உங்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. இரத்தமானது உடலில் சுற்றிக்கொண்டேயிருந்தால்தான் இதயம் வேலை செய்யும், உயிரும் உடலில் இருக்கும். ஒரு நிமிடம் நம்மை விட்டு அவருடைய கண்களை விலக்கினாரென்றால் நம் கதி அவ்வளவுதான். உங்கள் மேல் அவருக்கு கொள்ளை பிரியம். ஆகவே, உங்களை கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொள்கிறார்.

திராட்சை தோட்டக்காரராகிய இயேசு கிறிஸ்து, திராட்சை செடியாகிய நீங்கள் கனிதர வேண்டும் அதாவது மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக திகழ வேண்டும்



என்பதையே தன்னுடைய வேலையாக கொண்டிருக்கிறார். **கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி அதற்குத் தண்ணீர்ப்பாய்ச்சி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும் பகலும் காத்துகொள்வேன். (ஏசாயா 27:2,3)** ஒரு செடி கனி கொடுக்க வேண்டுமென்றால், அதை நட்டின நாள் முதற்கொண்டு, எந்த பூச்சிகளோ அதை அரித்துவிடாதபடி, அதற்கு வேலியடைத்து, தினமும் அதற்கு நீர்ப்பாய்ச்சி, உரங்களை போட்டு, கனி கொடுக்கும் வரைக்கும், பாதுகாத்து வளர்ப்பது போல, உங்களை கண்ணின்மணியைப் போல பாதுகாத்து, உங்கள் தேவைகளை அறிந்து, அவற்றை பூர்த்தி செய்து, நீங்கள் வளர்வதற்கு தடையாய் நிற்கிற காரியங்களை அகற்றி, உங்களை எந்த ஒரு சேதமுமின்றி காப்பாற்றுவார்.

**ஆம் தேவ பிள்ளையே, நான் என் தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போது, ஒரு நாள் நடைபயிற்சிக்காக ரோட்டில் நடந்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது வேகமாக வந்த டூவீலர், என் தாயின் வயிற்றில் மோதியதால் கீழே விழுந்துவிட்டார்கள். கரு கலைந்து விட்டதோ...! என்று பயந்து மருத்துவமனைக்கு கண்ணீருடன் ஓடிய வேளையில், கர்த்தாவே என் கர்ப்பத்தின் முதல் கனியை பாதுகாத்துக்கொள்ளும், அதை உமக்கென்று அர்பணிக்கிறேன் என்று ஜெபித்துக்கொண்டிருந்தார்களாம். என்னை ஆச்சரியம்! கருவிலிருந்த என்னை கர்த்தர் கிருபையால் காப்பாற்றி, ஒரு சேதமும் இல்லாமல் என் தாய் நல்ல முறையில் பிரசவிக்க கிருபை செய்தார். பாருங்கள், கர்த்தர் எவ்வளவு கரிசனை உள்ளவராயிருக்கிறார்! உங்களை மாத்திரமல்ல, உங்கள் வயிற்றிலிருக்கும் கருவைக்கூட காப்பாற்றக்கூடியவர் நம் இயேசு. நீங்கள் கனி கொடுத்து, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்று உங்களை பாதுகாக்கிறார்.**

## நீதிமானை ஒன்றும் சேதப்படுத்த மாட்டாது

**நீதிமானுக்கு ஒரு கேடும் வராது. (நீதிமொழிகள் 12:21)** ஏனென்றால் கர்த்தர் தமது கையினால் அவனைத்தாங்குகிறார். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நீங்கள் நீதிமான்கள். நீங்கள் உங்கள் கிரியைகளினால் அல்ல, இலவசமாய் அவருடைய கிருபையினால் இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களானீர்கள். பிதாவாகிய தேவனுக்கு தூரமா யிருந்த உங்களையும் என்னையும் கிறிஸ்து இயேசுவின் இரத்தம் சமீபமாக்கிற்று. அவருடைய இரத்தத்தினால் கிறிஸ்துவோடு நெருங்கி உறவாடுகிற அனுபவத்தை அவர் ஏற்படுத்தினார். கிறிஸ்துவோடு உன்னதங்களில் உட்கார வைத்த உங்களை சேதப்படுத்த அனுமதிப்பாரோ? உங்கள் ஆத்துமாவை பிசாசு தொடவிடுவாரோ? உங்களை வெட்கப்படுத்தவிடுவாரோ? நிச்சயமாக இல்லை. நீதிமான்களாகிய நீங்கள் பலத்த துருகமாகிய அவருடைய வல்லமையுள்ள நாமத்தில் இருக்கிறீர்கள். ஆகவே ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது.

இதற்கு வேதத்திலிருந்து அநேக உதாரணங்களைச் சொல்லலாம். நம்முடைய முற்பிதாவாகிய யாக்கோபு தன் மாமனாராகிய லாபானிடம் இருபது வருட காலம் அடிமையாக வேலை செய்து வந்தார். சம்பளம் இல்லாமல் வேலை பார்த்து வந்தார். ஒரு நாள் யாக்கோபின் சொப்பனத்தில் தேவ தூதன் தோன்றி, "**நீ தூணுக்கு அபிஷேகஞ்செய்து, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே; இப்போதும் நீ எழுந்து, இந்த தேசத்தை விட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப்போ**" என்று சொன்னார். அதன்படி தன் குடும்பத்தை அழைத்துக்கொண்டு பெத்தேலுக்கு போகிறதை கேள்விப்பட்ட யாக்கோபுடைய மாமனார், பின்னாக தொடர்ந்து போய் கண்டுபிடித்தான். யாக்கோபுக்கு விரோதமாய் தீங்கு செய்ய வந்த லாபானின் சொப்பனத்தில் தேவன் தோன்றி, **நீ யாக்கோபுக்கு விரோதமாய் நன்மையே**



**அன்றி, தீமை ஒன்றும் பேசாதே என்று தேவன் லாபானுக்கு கட்டளையிட்டார். (ஆதியாகமம் 31:29)** தேவபிள்ளையே.. யாக்கோபு மிகப்பெரிய தேசமாக மாறுவது தேவனுடைய விருப்பம். ஆனால் அந்த விருப்பத்தை நிறைவேற்ற விடாமல், தடுக்க லாபான் எத்தனிக்கிறான். கடைசிவரைக்கும் தனக்கு அடிமையாகவே வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறான். ஆனால் கர்த்தருடைய சித்தம் எதுவோ அது நிச்சயம் நிறைவேறும். நாம் சேவிக்கிற தேவன்,



நமக்கு விரோதமாக எழும்புகிறவர்களின் பேச்சைக்கூட அடக்கிப்போடுகிறார். கடைசியாக லாபான் தன் குமாரத்திகளை ஆசீர்வதித்து செல்கிறார்.

ஆம் அன்பானவர்களே... இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிற நீங்கள் நீதிமான். ஆகவே சத்துரு உங்களைத் தொட முடியாது. ஒரு வேளை நான் பாவத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறேன், நான் நீதிமான் அல்ல என்று சொல்வீர்களானால், இந்த நிமிடமே உங்கள் பாவங்களை இயேசுகிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு மனந்திரும்புங்கள். அவருடைய இரத்தம் உங்கள் பாவங்களை கழுவி நீதிமானாக மாற்றிவிடும். நீ ஒரு பாவி, என்று பிசாசு உங்களை குற்றப்படுத்தினால், நான் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிறேன், ஆகவே நீதிமானாகிய என்னை ஒன்றும் சேதப்படுத்தமாட்டாது என்று தைரியமாகச் சொல்லுங்கள்.

## அபிஷேகம் பண்ணப்பட்டவரை ஒன்றும் சேதப்படுத்தமாட்டாது

தைலக்கொம்பினால் அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீதுக்கு விரோதமாக பல சூழ்நிலைகளில் பல ரூபத்தில் பிரச்சனைகள் எழும்பி வந்தாலும், ஒன்றும் தாவீதை சேதப்படுத்த முடியவில்லை. சவுல் தாவீதைச் சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடுவேன் என்று ஈட்டியை அவன்மேல் எறிந்தான்; ஆனாலும் தாவீது விலகி இரண்டு தரம் அவனுக்குத் தப்பினான். (1 சாமுவேல் 18:11) ஆனால் கர்த்தர் தாவீதோடே கூட இருக்கிறார் என்றும் தன்னை விட்டு விலகிப்போனார் என்றும், சவுல் கண்டு, தாவீதுக்குப்பயந்து, அவனைத் தன்னைவிட்டு அப்புறப்படுத்தி, அவனை ஆயிரம் பேருக்கு அதிபதியாக வைத்தான். அப்படியே அவன் ஜனத்திற்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருந்தான். கொல்ல வகைத் தேடினவனுக்கு முன்பாக கர்த்தர் உயர்வைக் கட்டளையிட்டார். தன் சொந்த மகன் அப்சலோம் தாவீதை துரத்திக்கொண்டு வந்த சூழ்நிலையிலும், போராட்டங்கள் நிறைந்த வேளையிலும் கர்த்தர் தாவீதைப் பாதுகாத்துக்கொண்டார். ஆகவே என் தலையை நிமிரச் செய்பவரே என்று சங்கீதம் 3ல் கர்த்தரை புகழ்ந்து பாடுகிறார். 1 சாமுவேல் 30ம் அதிகாரத்தில், தாவீது மிகவும் நெருக்கப்படுகிறார். தன் பிள்ளைகள், மனைவிகளை எதிரிகள் சிறைபிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். தாவீதோடு கூட இருக்கிறவர்களோ.. அவரை எதிர்த்தார்கள். இந்த சூழ்நிலையில் தாவீது, தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக்கொண்டு, எதிரியின் பாளையத்திற்கு கர்த்தருடைய வழிநடத்துதலின்படி சென்று ஒரு சேதமும் இல்லாமல் "தாவீதின் கொள்ளை" என்று ஜனங்கள் ஆர்ப்பரிக்கும் அளவிற்கு மகா பெரிய வெற்றி அடைகிறார்.

ஆம் தேவ பிள்ளையே, தாம் அபிஷேகம் பண்ணிணவர்களை தேவன் மிகவும் கனப்படுத்துகிறார். அவர்களுக்காக எல்லாவற்றையும் செய்ய ஆயத்தமாக இருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய கண்களில் விலையேறப்பெற்றவர்களாய் மட்டுமல்லாமல், **அவர்களுக்கு அவரே அரணான அடைக்கலாமாயிருக்கிறார் (சங்கீதம் 28:8) நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும் இருங்கள் (1 நாளாகமம் 16:22)** என்று ராஜாக்களுக்கு கட்டளையிடுகிறார். ஒரு தேசத்தின் இராஜாவை விட அபிஷேகம் பண்ணப்பட்டவரை உயர்த்தி வைத்திருக்கிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் அதிகாரத்திற்காகவோ அல்லது ஆளுமைக்காகவோ தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கிறிஸ்துவை பிரதிபலிப்பதற்காக, தாகத்தோடு இருக்கிறவர்களை பரிசுத்த ஆவியானவர் அபிஷேகிக்கிறார். (எபேசியர் 1:13) மேல்வீட்டறையில் நூற்றிருபது பேர் மேல் இறங்கின பரிசுத்த ஆவியானவர், இன்றும் உங்களை தமது அபிஷேகத்தினால் நிரப்ப விருப்பமுள்ளவராயிருக்கிறார். யாரையெல்லாம் அவர் அபிஷேகம் பண்ணுகிறாரோ அவர்கள் உலகமெங்கும் சாட்சிகளாயிருக்கிறார்கள். ஆம், நீங்கள் அந்த பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக்கொள்ள வாஞ்சையாயிருங்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றவர்கள் அதை அனல் மூட்டி எழுப்புங்கள். நீங்கள் கர்த்தருடைய மகத்துவங்களை அறிவிக்கும்படியாக, தெரிந்து கொள்ளப்பட்ட இராஜரீக ஆசாரியர்கள். கர்த்தர் உங்களுக்கு



இராஜரீக அபிஷேகத்தைக் கொடுத்திருக்கிறார். **நீங்கள் பரிசுத்த ஆவியின் மூலமாய் கிறிஸ்துவுக்குள் முத்திரை போடப்பட்டிருக்கிறீர்கள். (எபேசியர் 1:13)** ஆகவே உங்களை ஒன்றும் சேதப்படுத்தமாட்டாது.

## ஊழியக்காரனை ஒன்றும் சேதப்படுத்தமாட்டாது

**தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிறவர் நம்முடைய தேவன் (சங்கீதம் 35:27)** சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிற அப்போஸ்தலனாகிய பவுலுக்கு விரோதமாக வந்த காரியங்கள் அநேகாம். ஆனால் ஒன்றும் அவரை சேதப்படுத்தமுடியவில்லை. பவுல் மெலித்தா தீவில், ஊழியம் செய்துவிட்டு, இரவில் குளிருக்காக நெருப்பை மூட்டி, அதில் விறகுகளை எடுத்துப்போடும்போது, ஒரு விரியன் பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவர் கையைக் கவ்விக்கொண்டது. விரியன் பாம்பு கடித்தால் முப்பது நிமிடங்களுக்குள்ளாகவே இறந்து விடுவார்கள். தீவில் உள்ள ஜனங்கள் இவன் கொலைபாதகன், சமுத்திரம் வழியாய் வந்த இவனை பழியானது விடவில்லை என்று சொல்லி, பவுல் சாகப்போகிறார் என்று சொல்லி, உற்றுநோக்கிக்கொண்டிருந்தார்கள். மணிநேரம் கூடிக்கொண்டே போனதே தவிர பவுலுக்கு ஒரு தீங்கும் ஏற்படவில்லை. வசனம் இப்படியாகச் சொல்கிறது, **பவுலோ ஒருதீங்கும் அடையாதிருந்தான் என்று. (அப்போஸ்தலர் 28:5)** இரண்டு முறை கப்பல் விபத்திலும், ஒரு சேதமும் ஏற்படவில்லை. ஒரு நாள் இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி, "உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைப்போடுவதில்லை" என்று திடப்படுத்தினார்.



ஆம் தேவபிள்ளையே, கர்த்தருடைய ஊழியத்தை வைராக்கியமாய் செய்கிறவர்களுக்கு ஒரு சேதமும் அணுகாது. என் வாழ்க்கையிலும் கூட, என் மகன் பென்னி சிறுவயதில் டெங்கு காய்ச்சலால் மிகவும் பாதிக்கப்பட்டான். ஒரு கட்டத்தில் மிகவும் ஆபத்தான நிலைமையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். அப்பொழுது நான் திருப்பத்தூர் உபவாச ஜெபத்தில் துதி ஆராதனை நடத்திக்கொண்டிருக்கிறேன். எனக்கு போன் மூலமாக அழைப்பு வந்தது. உடனே நீங்கள் சென்னைக்கு வாருங்கள் என்று. நான் ஊழியத்தை நிறைவேற்றுவதா அல்லது என் மகனை பார்க்கச் செல்வதா..? என்று குழம்பிக்கொண்டிருந்த சமயத்தில், நான் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றுவேன், என் மகனை கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்ற வைராக்கியத்துடன் இருந்தேன். என்ன ஒரு ஆச்சரியம்! உபவாச கூட்டங்கள் முடிந்து வீட்டிற்கு சென்று பார்த்தபோது, என் மகனை கர்த்தர் அற்புதமாய் சுகப்படுத்தியிருந்தார். இப்போது அவன் விடுமுறை நாட்களில் ஊழியத்தில் கேமரா எடுப்பதிலும் எனக்கு ஒத்தாசையாகவும் இருந்து வருகிறான். இது போன்று அநேக சாட்சிகளை என்னால் கூற முடியும்.

இதை வாசித்துக்கொண்டிருக்கும் தேவ பிள்ளையே... கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்ட நீதிமானாகிய நீங்கள், கர்த்தருக்காய் வைராக்கியமாய் எழும்பும்போது, உங்களையும் உங்கள் குடும்பத்தையும் கர்த்தர் பாதுகாத்துக்கொள்வார். கிறிஸ்துவின் அன்பை குறித்து என் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கும், என்னோடு பழகுபவர்களுக்கும் அறிவிப்பேன் என்று தீர்மானம் எடுங்கள். சத்துருவை எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்ளுங்கள். ஆவிக்குரிய வாழ்க்கையில் அடுத்த நிலைக்கு செல்லுங்கள். உங்கள் சபையில் ஏதாவது ஊழியத்தில் இணைந்து கொண்டு, சபைக்கு உதவியாயிருங்கள். சத்துரு வெள்ளம் போல வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாக கொடியேற்றுவார். அவனுடைய கிரியைகள் ஒன்றும் உங்களை சேதப்படுத்த மாட்டாது.

**கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார் (சங்கீதம் 121:5-7)**

## மகிமையாய் நடைபெற்ற

# முப்பெரும் விழா













**வி**ருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டைக்கு அருகில் உள்ள கல்லூரணி என்ற இடத்தில் **அற்புத ஏஜி சபையின் 25வது ஆண்டு ஆலய பிரதிஷ்டை விழா**, போதகர் ஜேக்கப் ஜெம்புலிங்கம் அவர்களின் தேவ **ஊழியத்தில் 30 ஆண்டுகள் நிறைவு** விழா மற்றும் **70வது பிறந்தநாள் விழா** என முப்பெரும் விழாவில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு, துதி ஆராதனை மற்றும் தீர்க்கதரிசன தேவ செய்தியை பிரசங்கித்தேன். கர்த்தருடைய ஆவியானவர் தம்முடைய பிரசன்னத்தினாலும் அபிஷேகத்தினாலும் வந்த ஒவ்வொருவரையும் நிரப்பினார். தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது.

போதகர் ஜேக்கப் ஜெம்புலிங்கம் அவர்கள் ஒவ்வொருநாளும் உங்களுக்காகவும், ரூஹா ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கிறார்கள் என்று சபை விசுவாசி ஒருவர் சொன்னதை நான் கேட்டபோது, இதயத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு மிகவும் நன்றி செலுத்தினேன். மேலும் போதகர் அவர்கள் விருதுநகர் மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமங்களின் பெயர்களையும் சொல்லி அதற்காக ஜெபித்தபோது, தேவ மனுஷனின் ஆத்தும பாரத்தை கண்டு தேவனை ஸ்தோத்தரித்தேன். போதகர் அவர்களுக்கு தேவன் ஊழியம் செய்வதற்கு நல்ல சுகம், பெலன், ஆரோக்கியத்தைத் தந்து, தரிசனங்களை நிறைவேற்றுவராக என்று ஜெபிக்கிறேன்.

## தீர்க்கதரிசன வார்த்தையை நிறைவேற்றிய தேவன்



கடந்த 2011ம் வருடம் விருதுநகர் போதகர்கள் ஐக்கியத்தின் சார்பில் **பெந்தேகொஸ்தே பெருவிழா** சிவகாசியில் வைத்து நடைபெற்றது. அதில் துதி ஆராதனை ஏறெடுத்து, தேவ செய்தி அளிக்கும்படி அழைக்கப்பட்டிருந்தேன். கூட்டத்தில் தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு, **“இங்குள்ள ஐந்து போதகரின் பிள்ளைகளைத் தேவன் தொடுகிறார். நீங்கள் உங்களுடைய பாவ வாழ்க்கையை விட்டு, கர்த்தருக்காய் வைராக்கியமாய் ஊழியம் செய்வீர்கள்”** என்று தீர்க்கதரிசனம் உரைத்தேன். கடந்த ஜீன் மாதம் சிவகாசி பெந்தேகொஸ்தே பெருவிழாவிற்கு சென்றபோது, நீங்கள் 13 வருடங்களுக்கு முன்பாக உரைத்த தீர்க்கதரிசனம் நிறைவேறியது. இப்போது ஐந்து வாலிபர்களும் கர்த்தருக்கென்று ஊழியம் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அதில் ஒரு வாலிபன்தான், போதகர் ஜேக்கப் ஜெம்புலிங்கம் அவர்களின் மகன் போதகர் சார்லஸ் அவர்கள் இரட்சிக்கப்பட்டு, இப்பொழுது தனது தகப்பனாருடன் இணைந்து ஊழியம் செய்து வருகிறார் என்று கேள்விபட்டபோது, மிகவும் தேவனுக்கு மிகவும் நன்றி செலுத்தினேன்!




கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, சென்னையில் வைத்து, ஜனங்களின் ஆசீர்வாதத்திற்காக செப்படம்பர் 12, 13, 14 ஆகிய மூன்று நாட்கள் **SUPERNATURAL CROSSOVER** என்ற தலைப்பில் விசேஷித்த கூடுகை ரூஹா ஊழியங்கள் சார்பாக நடைபெற்றது. சென்னை, பெங்களூர் மற்றும் பல்வேறு ஊர்களிலிருந்து இந்த மூன்று நாட்கள் கூடுகையில் கலந்து கொண்டார்கள். வல்லமையான துதி ஆராதனை, தீர்க்கதரிசன வார்த்தைகளோடு தேவன் இடைபட்டார். அநேக அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் கட்டுகளை உடைக்கும் ஜெபம், வியாதியஸ்தர்களுக்கான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.











இரண்டாவது நாள் கூட்டத்தில் நடந்த

# அற்புத சாட்சி



என் பெயர் **சரிதா.** நான் பெங்களூரு பட்டணத்திலிருந்து சென்னையில் ஹோட்டல் அறை எடுத்து தங்கி இந்த மூன்று நாட்கள் கூட்டங்களில் கலந்து கொண்டேன். கர்த்தர் எனக்கு எப்படியாவது ஒரு அற்புதம் செய்ய வேண்டும் என்று விசுவாசத்தோடு வந்தேன். கடந்த வருடம் எனக்கு கால் எலும்பு முறிவு ஏற்பட்டு ஆறு மாதம் மருத்துவமனையில் இருந்தேன். காலில் தொற்று ஏற்பட்டதினிமித்தமாக ஏழு முறை அறுவை சிகிச்சை நடந்தது. ஆனால் அதிக வலி இருந்து கொண்டே இருந்தது. குணமாகவில்லை. மேலும் என் கணவருக்கு வேலை போய்விட்டது. இதனால் மிகுந்த மன குழப்பத்துடனும் வேதனையுடனும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டேன். 2வது நாளில் போதகர் தீர்க்கதரிசனமாக என்னை அழைத்து எனக்காக ஜெபித்தார்கள். அந்த நேரமே கர்த்தர் எனக்கு பூரண சுகத்தைக் கொடுத்தார். தாங்கி தாங்கி நடந்து வந்த என்னை நடக்கவும் ஓடவும் செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

## தீர்க்கதரிசன வார்த்தையை நிறைவேற்றினார்



இரண்டு மாதங்களுக்கு முன்பாக மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் என்ன செய்வதென்று தெரியாத நேரத்தில் போதகர் ஆல்வின்தாமஸ் அவர்களிடம் நானும் என் சகோதரியும் ஜெபிக்க வந்திருந்தோம். அப்பொழுது அவர்கள் ஜெபித்து தீர்க்கதரிசனமாக, உனக்கு திருமண காரியத்தை தேவன் வாய்க்கப்பண்ணுவார், உன் சகோதரி வெளி நாட்டில் படிப்பதற்கு செல்லுவாள் என்று சொன்னார்கள். தேவனுடைய ஊழியக்காரர் சொன்னதுபோலவே என் சகோதரி ஸ்காட்லாந்து செல்லவும், எனக்கு நிச்சயதார்த்தம் நடக்கவும் தேவன் கிருபை செய்தார். தேவன் தம்முடைய வாக்கை நிறைவேற்றினதற்காக நன்றி செலுத்துகிறேன்.

## வார்த்தையின் மூலமாக பேசினார்



ஏழு வருடங்களுக்கு முன்பாகவே நான் ஒரு ஆண் குழந்தையைத் தருவேன் என்று போதகர் ஆல்வின் தாமஸ் மூலமாக தீர்க்கதரிசனமாக பேசினார். அதன்படியே கர்த்தர் ஆண் குழந்தையைக்கொடுத்தார். இந்த கூட்டத்திலும் எங்கள் வாழ்க்கைக்கு தேவையான தீர்க்கதரிசன வார்த்தையை போதகர் மூலமாக எங்களோடு பேசினார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

# கிறிஸ்மஸை ஏழை எளியவர்களுடன் கொண்டாடுங்கள்!

அன்பானவர்களே, ஒவ்வொரு நாளும் நெசா மூலமாக ஏழை எளியவர்கள், மாற்றுத்திறனாளிகள் என அநேகருக்கு உதவிகளை செய்துகொண்டு வருகிறதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

- **ஒவ்வொரு மாதமும் கணவனை இழந்து தவித்துக் கொண்டிருக்கிற 50க்கும் அதிகமான கைம்பெண்களுக்கு அரிசி வழங்கப்பட்டு வருகிறது.**

- **ஒவ்வொரு நாளும் ஒரு வேலை உணவிற்கும் போராடுகிற மக்கள் வசிக்கும் இடங்களுக்கும், வீதிகளில் வாழ்பவர்களுக்கும், மருத்துவமனைகளுக்குச் சென்று உணவளித்து வருகிறோம். குறிப்பாக சென்னையில் முக்கிய மருத்துவமனையான அடையாறு கேன்சர் மருத்துவமனையில் 180 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கும் அன்றாடம் உணவளித்து வருகிறோம், அங்கு வியாதியினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களை பராமரிக்கிறவர்களுக்கு சிறப்பான முறையில் உணவளித்து வருகிறோம்.**

- **நெசா டியூசன் - சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உபரகரணங்களை வாங்கி தருவதோடு, சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் கல்வியில் பின் தங்கிய மாணவர்களை படிப்பில் ஊக்கப்படுத்த மாலை வகுப்பு நடத்தி, கல்வி தரத்தை உயர்த்தி வருகிறது.**

வருகிற டிசம்பர் மாதத்தில் சுமார் 1000க்கும் மேற்பட்ட ஏழை எளியவர்களுக்கு புத்தாடைகளை வழங்கி, அவர்களுக்கு அறுசுவை உணவுகளைக் கொடுத்து கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை அறிவித்திட நெசாவோடு இணைந்து சமுதாயத்தில் நலிவடைந்தவர்களைத் தாங்குங்கள். ஒரு குழந்தைக்கு 1000 ரூபாய் செலவாகிறது. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு உதவி செய்ய உங்கள் உதாரத்துவமான கரங்களை நீட்டுங்கள்.

இப்படிப்பட்ட நற்காரியங்களைச் செய்து வருகிற நெசாவை உங்களுடைய நன்கொடைகளால் தாங்குங்கள். உங்கள் பிறந்தநாள் மற்றும் திருமண நாள் போன்ற விசேஷ நாட்களில் ஏழை எளியவர்களை நினைவு கூறுங்கள். "சிறுமைப் பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான், தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்" (சங்கீதம் 41:1) என்ற வசனத்தின்படி **கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

Scan here to pay using UPI app

**NESSA TRUST**

| | |
|---|---|
| Bank: | HDFC BANK LTD |
| Name: | NESSA TRUST |
| Acc.No: | 50200002673830 |
| Branch Name: | KODAMBAKKAM BRANCH |
| IFSC Code: | HDFC0000574 " |

G Pay **+91 9444150777**







உங்களுடைய உதாரத்துவமான நன்கொடைகளை NESSA TRUST என்ற பெயரில் மணி ஆர்டர் அல்லது காசோலையாக அனுப்பலாம். நீங்கள் நன்கொடைகளை அனுப்பிய பிறகு **9884901777** என்ற எண்ணிற்கு வாட்ப் அல்லது போன் மூலமாக கட்டாயம் தெரிவியுங்கள். உங்களுக்கு இரசீது அனுப்ப எங்களுக்கு ஏதுவாயிருக்கும்.









# A Call to Build

INDIAN HOUSE OF PRAYER FOR EVERYONE

## IN-HOPE

PRAISE · PRAY · PROCLAIM




**தேசங்களின் ஆசீர்வாதத்திற்காக 24/7 மணி நேர துதி மற்றும் மன்றாட்டு ஜெப மையத்தை சென்னையில் கட்டுவதற்கு தேவன் தந்த தரிசனத்தில் நீங்களும் ஒரு தூணாக இருக்க விரும்புகிறீர்களா?**

### தரிசனம்

- நமது இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக 24 மணி நேரமும் ஆராதனை வீரர்களும் ஜெப வீரர்களும் ஒன்றிணைந்து கர்த்தரை நோக்கி துதி பலிகளையும் ஜெப தூபத்தையும் ஏறெடுக்கும் ஒரு பலிபீடத்தை ஸ்தாபிக்க
- விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை திரும்ப எடுப்பிக்கும் விதமாக தேவ பிரசன்னம் நிறைந்த பலிபீடத்தை உருவாக்குதல்
- அப்போஸ்தலனாகிய தோமையார் இரத்த சாட்சியாக மரித்த புனித தாமஸ் மலையில் பலிபீடத்தைக் கட்ட

### பணி

- ஆராதனை, ஜெபம் மற்றும் திருப்புமுனைகளை பிரகடனப்படுத்துகிற துதி ஆராதனை வீரர்களையும் மன்றாட்டு ஜெப வீரர்களையும் உருவாக்குதல்
- இந்தியா மற்றும் உலக நாடுகளில் வெவ்வேறு திருச்சபைகள், தனி நபர் மற்றும் குழுக்கள் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் ஆராதனை மற்றும் ஜெபத்திற்காக ஒதுக்கீடு செய்தல்
- மலையின் மீது நடக்கும் Movement on the Mount ஆராதனையை உலகளவில் 24 மணி நேரமும் அர்ப்பணிப்புள்ள மீடியா மிஷனரிகள் குழு மூலம் ஒளிபரப்புதல்

### ஏற்பாடு

- சென்னையின் மையப்பகுதியில் இந்த மகத்தான தரிசனத்தை நிறைவேற்ற, தேவன் கொடுத்த இந்த முக்கியமான கடைசிகால திட்டத்தை நிறைவேற்ற தேவ ராஜ்யத்தின் பங்காளர்களாக இணைந்து விதைப்பவர்கள் தேவை
- தேவனுடைய வீட்டைக்கட்ட நீங்கள் உதவும்போது, கர்த்தர் உங்களையும் உங்கள் வீட்டையும் அதிகமாக ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்கிறோம்.
- இந்த எழுப்புதல் மையம் கட்டுவதற்காக விதைக்கும் ஒவ்வொருவரின் பெயரும் நினைவு சுவரில் பொறிக்கப்படும், மேலும் நமது ஜெபவீரர்கள் அவர்களுக்காக தினமும் ஜெபிப்பார்கள்.

### உங்கள் காணிக்கைகளை எளிதாக விதைக்கலாம்!

**1** ACCOUNT TRANSFER

**RUAH MINISTRIES BUILDING FUND**
Acc. No.: **50200033712782** Bank Name: **HDFC BANK**
Branch: **Kodambakkam** IFSC Code: **HDFC0000574**

**RUAH MINISTRIES**
Acc. No.: **05741450000037** Bank Name: **HDFC BANK**
Branch: **Kodambakkam** IFSC Code: **HDFC0000574**

**2** UPI TRANSFER

SCAN HERE TO GIVE

**3** CHEQUE / DD

Cheque in Favour of:
**Ruah Ministries Building Fund**

**4** ONLINE GIVING

for giving online visit:
**ruahministries.org/give-online**

**தேவன், தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் (லூக்கா 18:7,8)**

FOR MORE INFORMATION **9884710777 | 9884901777**

SOW INTO THE KINGDOM

## எளிதாக உங்கள் காணிக்கைகளை விதைக்கலாம்!

உங்களுடைய காணிக்கைகளை அனுப்பியதும் தவறாமல் +91 9884901777 என்ற எண்ணிற்கு தகவல்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுது உங்களுடைய காணிக்கைக்கான இரசீது மற்றும் கடிதம் உங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு ஏதுவாயிருக்கும்.

**1 Google Pay**

**+91 9444150777**

G Pay · PhonePe · Paytm

**2 Website** (Inside India / International)

Our Secure Payment Gateway

**ruahministries.org/give-online**

Razorpay · PayPal

SCAN QR CODE TO PAY THRIUGH UPI APP

**RUAH MINISTRIES**

| | |
|---|---|
| Bank: | HDFC BANK LTD |
| Name: | RUAH MINISTRIES |
| Acc.No: | 05741450000037 |
| Branch Name: | KODAMBAKKAM |
| IFSC Code: | HDFC0000574 |

## பரிசுத்த ஆராதனைகள்

| | |
|---|---|
| முதல் ஆராதனை | காலை 6 மணிக்கு |
| இரண்டாம் ஆராதனை | காலை 8 மணிக்கு |

**இடம்:** ரூஹா துதி ஜெப மையம், வடபழனி

| | |
|---|---|
| மூன்றாம் ஆராதனை | காலை 10 மணிக்கு |

**இடம்:** CSI St. Thomas Hr. Sec School, St. Thomas Mount, Chennai

(ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் திருவிருந்து ஆராதனை நடைபெறும்)

**தெபோராள்** பெண்கள் கூடுகை — செவ்வாய் (மாலை 6.30 மணிக்கு)

**இயேசுவின் தொடுதல்** (விசேஷித்த சுகம் மற்றும் விடுதலை ஜெபம்) — புதன் காலை 10:00 மணிக்கு

**வாலிபர்கள்** கூடுகை — சனி (மாலை 6.30 மணிக்கு)

மின்னஞ்சல் முகவரி: prayer.ruah@gmail.com

**வியாதியினால் கஷ்டப்படுகிறீர்களா?**

**கடன் தொல்லையா?**

**குடும்பத்தில் சமாதானம் இல்லையா?**

அற்புதத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். இன்றும் உங்களுக்கு அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வார். உங்களுடைய ஜெப விண்ணப்பங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

உங்களுடைய ஜெப உதவிக்கும்

**+91 9884901 777,**

**+91 9884710 777**

என்ற எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.